தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் 15 மாவட்டங்களில் கூடுதல் மழை : இன்றும் கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




தமிழகத்தின் 15 மாவட்டங்களில் வழக்கத்தை விட கூடுதலாக மழை பெய்துள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. மன்னார் வளைகுடா பகுதியில் உருவாகியுள்ள காற்று மேலடுக்கு சுழற்சியின் காரணமாக மாநிலத்தின் சில இடங்களில் சனிக்கிழமை (அக்.25) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையின் காரணமாக சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்நிலையில் இலங்கை மற்றும் மன்னார் வளைகுடா இடையே காற்று மேலடுக்கு சுழற்சி அண்மையில் உருவானது. இதன் காரணமாக தமிழகத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய பலத்த மழை மழையோ பெய்யும் என்று முன்னறிவிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அக்டோபர் 1-ஆம் தேதியிலிருந்து, தீபாவளி வரை தமிழகத்தில் 15 மாவட்டங்களில் வழக்கத்தை விட கூடுதலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக திருநெல்வேலியில் 309 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இது வழக்கத்தை விட இருமடங்கு அதிகமாகும். நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருவாரூர், ராமநாதபுரம், சென்னை, கோவை, கடலூர், திண்டுக்கல்,

ஈரோடு, நீலகிரி, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருப்பூர், ஆகிய இடங்களிலும் அதிக அளவு மழை பெய்துள்ளது. சென்னை நுங்கம் பாக்கத்தில் 397 மில்லி மீட்டரும், மீனம்பாக்கத்தில் 361 மில்லி மீட்டர் மழையும் இதுவரை பெய்துள்ளது. வேலூர், திருச்சி, திருவண்ணாமலை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் மட்டும் வழக்கத்தை விடக் குறைவான அளவு மழை பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவ மழை தீவிரமடையும் பட்சத்தில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் மழை பொழிவு இருக்கும் என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):-

சென்னை விமான நிலையம், அவினாசி, காஞ்சிபுரம் - 90, சென்னை (நுங்கம்பாக்கம்) பெருந்துறை, கொலப்பாக்கம் - 80, பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, சோழவரம் - 70, திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம், மாதவரம், எண்ணூர், மரக்காணம் - 60, வேதாரண்யம், செம்பரம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம், ஈரோடு, வாடிப்பட்டி, விராலிமலை, கள்ளக்குறிச்சி - 60.

## காற்று மேலடுக்குச் சுழற்சி: மேலும் இரு நாள்களுக்கு பலத்த மழை நீடிக்கும்

மன்னார் வளைகுடாப் பகுதியில் உருவாகியுள்ள காற்று மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக, தமிழகத்தில் மேலும் இரு நாள்களுக்கு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், இலங்கை- மன்னார் வளைகுடா இடையே காற்று மேலடுக்குச் சுழற்சி உருவாகி உள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் அடுத்த இரு நாள்களுக்கு மழையோ அல்லது இடியுடன் கூடிய பலத்த மழையோ பெய்யும் என்று வானிலை ஆய்வு

மையம் தெரிவித்துள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இம்மாதம் 1-ஆம் தேதியிலிருந்து, தீபாவளி வரை தமிழகத்தின் 15 மாவட்டங்களில் வழக்கத்தை விடக் கூடுதலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக திருநெல்வேலியில் 309 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இது வழக்கத்தை விட இருமடங்கு அதிகமாகும். நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருவாரூர், ராமநாதபுரம், சென்னை, கோவை, கடலூர், திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருப்பூர், ஆகிய இடங்களிலும் அதிக அளவு மழை பெய்துள்ளது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 397 மி.மீ., மீனம்பாக்கத்தில் 361 மி.மீ. மழையும் இதுவரை பெய்துள்ளது. வேலூர், திருச்சி, திருவண்ணாமலை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் மட்டும் வழக்கத்தை விடக் குறைவான அளவு மழை பதிவாகியுள்ளது. வடகிழக்குப் பருவ மழை தீவிரமடையும் பட்சத்தில், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் மழைப் பொழிவு இருக்கும் என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வெள்ளிக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):** சென்னை விமான நிலையம், அவினாசி, காஞ்சிபுரம்- 90, சென்னை (நுங்கம்பாக்கம்) பெருந்துறை, கொலப்பாக்கம்- 80, பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, சோழவரம்- 70, திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம், மாதவரம், எண்ணூர், மரக்காணம்- 60, வேதாரண்யம், செம்பரம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம், ஈரோடு, வாடிப்பட்டி, விராலிமலை, கள்ளக்குறிச்சி- 60.

## <u>திருமூர்த்தி, அமராவதி அணைகள் நிலவரம்</u>

உடுமலை அருகே உள்ள 60 அடி உயரமுள்ள திருமூர்த்தி அணையில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி நீர்மட்டம் 40.62 அடியாக

இருந்தது. 1,935 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 1,175.11 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு பாலாறு வழியாக 9 கன அடியும், காண்டூர் கால்வாய் மூலமாக 831 கன அடியும் என மொத்தம் 840 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,180 கன அடி நீர் வெளியேறிக்கொண்டிருந்தது. மழைப் பொழிவு இல்லை.

அமராவதி அணை: 90 அடி உயரமுள்ள அமராவதி அணையில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி நீர்மட்டம் 81.32 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,939 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையில் 3,285.85 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. அணையில் இருந்து 158 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. 4 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

## <u>கனமழையால் நிரம்பிய வனக்குட்டைகள்!</u>

தாளவாடி வனத்தில் பெய்து வரும் தொடர் மழையால் வனக்குட்டைகள், தடுப்பணைகளில் தண்ணீர் நிரம்பி வழிகிறது. சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்குள்பட்ட தலமலை, தாளவாடி, கேர்மாளம், தொட்டபுரம், முதியனூர் உள்ளிட்ட வனப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், சிற்றோடைகளில் வெள்ளநீர் பாய்ந்து ஓடுகிறது. அடர்ந்த வனப் பகுதியில் ஆங்காங்கே புதிய அருவிகள், நீரோடைகள் உருவாகி உள்ளன. இதன் காரணமாக அங்கிருந்து வெளியேறும் வெள்ளநீர் ஓரிடத்தில் சேர்வதால், வனஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. வனத்தில் அனைத்து இடங்களிலும் வெள்ளநீர் சூழ்ந்து காணப்படுகிறது. வனத்தையொட்டியுள்ள தலமலை,நெய்தாளபுரம், மாவநத்தம், ராமர் அணை, தொட்டபுரம் வனக்குட்டைகளில் கசிவுநீர்க் குட்டைகளில் நீர் நிரம்பி வழிகிறது. தாளவாடி-தலமலை

வனச்சாலைகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. தொட்டபுரம், முதியனூர், தலமலை, நெய்தாளபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்ட ராகி, மக்காச்சோளம், முட்டைக்கோஸ் பயிர்கள் நீரில் மூழ்கின. தொடர் மழையால் பயிர்கள் அழுகியதால், மகசூல் பாதிக்கப்பட்டது. பலத்த மழையால் மலைவாழ் மக்கள் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. வனக்குட்டைகளில் நீர் நிரம்பி வருவதால், வனவிலங்குகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் புகுந்துவிடுவது குறைந்துள்ளது. வனக்குட்டைகளில் நீர் நிரம்பியுள்ளதால், யானைகள், சிறுத்தைகள், காட்டெருமைகள் அந்தந்த குட்டைகளை பயன்படுத்துவதால் சாலைகளில் அவற்றின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது. வனக்கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

## குன்னூரில் பரவலாக மழை

குன்னூரில் பரவலாக மழை பெய்து வருவதால், சுற்றுலாத் தலங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன. குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 4 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. அவ்வப்போது மூடுபனி உருவாகி வருவதால் வாகனங்களை இயக்குவதில் சிரமம் எற்பட்டுள்ளது. இதனால், சுற்றுலாத் தலங்களான சிம்ஸ்பார்க், லேம்ஸ்ராக், டால்பினோஸ் போன்ற பகுதிகளில் உள்ள காட்சி முனைகளை காண முடியாத சூழல் நிலவுகிறது. சுற்றுலாப் பயணிகளின் வரத்து மிகவும் குறைந்து விட்டதால், அப்பகுதியில் உள்ள பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளன.

## நீர்வடிப் பகுதி உறுப்பினர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி முகாம்

புதுப்பாளையத்தில் நீர்வடிப் பகுதி பயனாளிகள் குழு உறுப்பினர் களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. வேளாண் துறை, பிரீஸ் தொண்டு நிறுவனம் இணைந்து இப் பயிற்சி முகாமை நடத்தின. தொடக்க விழாவுக்கு, ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி

மேலாண்மைத் திட்ட அலுவலர் அரக்குமார் தலைமை வகித்தார். சமூக களவழி அலுவலர் நிர்மலா முன்னிலை வகித்தார். காஞ்சி, கொரட்டாம்பட்டு நீர்வடிப் பகுதிகளில் நடைபெற்ற பயிற்சி முகாமை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ஜெ.ஜெயச்சந்திரன் தொடங்கி வைத்தார். பிரீஸ் தொண்டு நிறுவனப் பயிற்சியாளர்கள் பி.சண்முகம், மூர்த்தி, அன்பு, பி.துளசி மஞ்சு ஆகியோர் நீர்வடிப் பகுதி பயனாளிகள் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இதில், தொண்டு நிறுவன இயக்குநர் பி.சேகர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வலியுறுத்தல்**

பருவமழையையொட்டி, சாகுபடிக்கு சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் என வேளாண் இணை இயக்குநர் மோகன் வலியுறுத்தினார். இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தருமபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தற்போது பரவலாகப் பெய்து வருகிறது. இந்த மழையைப் பயன்படுத்தி இந்தப் பருவத்திற்கு நெல், ராகி, கொள்ளு, கொண்டைக் கடலை, நிலக்கடலை சாகுபடி செய்யலாம். இதற்குத் தேவையான சான்று பெற்ற விதைகள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள், அனைத்து துணை வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதில், நெல் சாகுபடி செய்ய ஏற்ற ரகமான ஏபிடி 39, ஏபிடி 46, 49, ஐஆர் 2, ராகியில் ஜிபியு 67, கொள்ளு பையார் 1, 2, கொண்டைக் கடலையில் கோ 4, ஜாக்கி, நிலக்கடலையில் டிஎம்வி 7, 13, விஆர்ஐ 1,2, கே 6 ஆகிய ரகங்கள் தற்போது மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் நிகழ் பருவத்திற்கு ஏற்ற, சான்று பெற்ற விதைகளை சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

**"அடுத்த 4 நாள்களுக்கும் பலத்த மழை பெய்யக்கூடும்'**

தற்போதைய வானிலை அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த 4 நாள்களுக்கு பலத்த மழை பெய்யக் கூடும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (அக்.25 முதல் 28-ஆம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன், பல இடங்களில் 7 மிமீ முதல் 15 மிமீ வரை மழை பெய்யக்கூடும். காற்றின் திசைவேகம் மணிக்கு 2 கிமீ முதல் 3 கிமீ வேகத்தில் கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 71.6 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 86 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 88 சதம் முதல் அதிகபட்சம் 95 சதம் வரை இருக்கும். கோழிப் பண்ணையாளர்களுக்கு..: அடுத்த மூன்று நாள்களுக்கும் மழைக்கான வாய்ப்பும், ஈரப்பதமும் அதிகமாகக் காணப்படும் என்பதாலும், வெப்ப அளவுகள் இயல்பைவிட குறைவாக உள்ளதாலும் பண்ணைக் கோழிகளிடையே தீவன எடுப்பு அதிகரித்து இருக்கும். தீவனத்தின் ஈரப்பதமும் சற்று அதிகரித்து காணப்படும். இதனால், தீவனத்தில் எரிசக்தியின் அளவு கூட்டித்தர வேண்டும். இது தீவன எடுப்பைக் கட்டுப்படுத்துவதுடன், முட்டையில் எடையைக் குறைக்காமல் இருக்க உதவும். தீவன மூலப்பொருள்களின் சேமிப்பிலும், அதன் கொள்முதலிலும் தற்போதைய வானிலைச் சூழலில் கவனம் செலுத்த வேண்டும். கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆயவில், கோழிகள் பெரும்பாலும் குடல்புண், இறக்கை அழுகல் நோய், மேல்மூச்சுக் குழாய் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் தீவன மூலப்பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம் நோய்க் கிருமியின் மாசுபாடு உள்ளதா என ஆய்வு செய்து, தரமான மூலப்பொருள்களை

உபயோகப்படுத்தவும், பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்கவும் வேண்டும். வேளாண் விவசாயிகளுக்கு..: சாகுபடி செய்யப்பட்டுள்ள ஆமணக்கு செடிகளின் 2 மாத வயதுடைய பயிரில் காவடிப்புழு, புரொடினியா புழுக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த வகைப் புழுக்கள் இலையின் நரம்புப் பகுதியை மட்டும் விட்டுவிட்டு இலையை முழுவதும் தின்றுவிடும். இளம்புழுக்களைக் கட்டுப்படுத்த வேப்பங் கொட்டையின் பருப்பு சாறு 5 சதம் அல்லது வேப்ப எண்ணெய் 3 சதம் கரைசலைத் தெளிக்கவும், வளர்ந்த புழுக்களின் தாக்குதல் காணப்பட்டால், குளாரிபைரிபாஸ் மருந்தைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சங்ககிரியில் பலத்த மழை

சேலம் மாவட்டம், சங்ககிரியில் வியாழக்கிழமை பெய்த பலத்த மழையால் இரு வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன. சங்ககிரியில் வியாழக்கிழமை 33 மி.மீ. மழை பெய்தது. இந்த மழையின் காரணமாக கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமம், வீரகுட்டை பகுதியைச் சேர்ந்த சௌரியப்பன் மனைவி மாரியம்மாள், அதே பகுதியைச் சேர்ந்த வெள்ளையன் மகன் வெள்ளையக் கவுண்டர் ஆகியோரின் வீட்டின் சுவர்கள் இடிந்து விழுந்தன. இதில், வீட்டில் இருந்த பொருள்கள் ஏதும் சேதமடையவில்லை. ஓலக்கசின்னானூர் பகுதியைச் சேர்ந்த குருசாமி மகன் கந்தன் என்பவருக்குச் சொந்தமான கன்றுக்குட்டி மின்னல் பாய்ந்து உயிரிழந்தது. இது குறித்து சங்ககிரி வருவாய்த் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ. 69.38 லட்சம் பயிர்க் கடன்

அரியலூரில் 183 விவசாயிகளுக்கு ரூ. 69.38 லட்சம் மதிப்பிலான பயிர்க் கடன் உதவிகளை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெள்ளிக்கிழமை வழங்கினார். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், கூட்டுறவுத் துறை சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கங்களின் விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் உதவிக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்ச்சி ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.இதில் 16 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சேர்ந்த 183 விவசாயிகளுக்கு ரூ. 69 லட்சத்து 38 ஆயிரத்து 970 மதிப்பிலான பயிர்க் கடனுதவிகளை வழங்கி ஆட்சியர் பேசியது: அரியலூர் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு பயிர்க் கடனாக 2014-15 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசின் கூட்டுறவுத்துறை மூலம் ரூ. 90 கோடி வழங்க நிர்ணயம் செய்யப்பட்டு, செப்டம்பர் மாதம் வரை 64 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 10,155 நபர்களுக்கு ரூ. 53.95 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர்க் கடனுக்கான வட்டித்தொகை தமிழக அரசால் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது, நெல், பருத்தி, கரும்பு, மக்காச்சோளம் மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக அரியலூர் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சேர்ந்த விவசாய உறுப்பினர்களுக்கு நெல் பயிருக்கு 144 நபர்களுக்கு 250.5 ஏக்கருக்கு ரூ. 47,05,040 மதிப்பிலும், பருத்தி 22 நபர்களுக்கு 80 ஏக்கருக்கு ரூ. 11,54,190 மதிப்பிலும், கரும்பு பயிருக்கு 10 நபர்களுக்கு 24.45 ஏக்கருக்கு ரூ. 7,19,390 மதிப்பிலும், மக்காச்சோளப் பயிருக்கு 2 நபர்களுக்கு 9.30 ஏக்கருக்கு ரூ.87,750 மதிப்பிலும், மரவள்ளிக்கிழங்கு 5 நபர்களுக்கு 14 ஏக்கருக்கு ரூ. 2,72,600 மதிப்பிலும் என மொத்தம் 183 விவசாய சங்க உறுப்பினர்களுக்கு 377.80 ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ரூ. 69 லட்சத்து 38 ஆயிரத்து 970 வழங்கப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர். இந்நிகழ்ச்சியில், வேளாண் இணை இயக்குநர் குணசேகரன், மண்டல இணைப் பதிவாளர் (பொ) சிவ. முத்துக்குமாரசாமி, கூட்டுறவு சார்பதிவாளர்கள் ஆர். பழனியப்பன், சி.மகாலிங்கம், கே.கே. சிவசுப்பிரமணியன், சி. ராஜ்குமார், பழனிச்சாமி,

மற்றும் முதுநிலை ஆய்வாளர்கள் க. இளஞ்செழியன் க. சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஈச்சன்விடுதியில் 28.4 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக ஈச்சன்விடுதியில் 28.4 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): ஈச்சன்விடுதி 28.4, மதுக்கூர் 22.4, அதிராம்பட்டினம் 18.2, பேராவூரணி 18, பட்டுக்கோட்டை 15.5, அணைக்கரை 13.4, பூதலூர் 11, வெட்டிக்காடு 8.5, மஞ்சலாறு 7.8, பாபநாசம் 5, திருவிடைமருதூர் 4.4, கும்பகோணம், திருவையாறு தலா 4, நெய்வாசல் தென்பாதி 2.6, ஒரத்தநாடு 2.5. அய்யம்பேட்டை 2, தஞ்சாவூர் 1.2, வல்லம் 1. ஆனால், மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பகலில் மழை இல்லை. மாறாக, பகலில் வானில் மேகமூட்டமும், வெயிலும் மாறி, மாறி இருந்தன.

## தேவையான விதைநெல் கையிருப்பு உள்ளது: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்

குமரி மாவட்ட அரசு கொள்முதல் மையங்களில் தேவையான நெல் விதைகள் கையிருப்பு உள்ளதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் உதயகுமார் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில், மாவட்டம் முழுவதிலும் இருந்து விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அப்போது, நெய்யாறு சானலில் தேவையான தண்ணீர் வரவில்லை. எனவே இதற்கு மாற்றுத் திட்டம் வகுக்கவேண்டும் எனவும், நீரினைப் பயன்படுத்துவோர் சங்க தேர்தலுக்கான பணிகள் நடந்து வருகிறதா எனவும் விவசாயிகள்

கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அதிகாரிகள், நெய்யாறு சானலில் தண்ணீர் விடுவது குறித்த மாற்று ஏற்பாடுகளை அரசுதான் முடிவு செய்யவேண்டும் எனவும், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்துக்கான தேர்தல் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது எனவும் தெரிவித்தனர். இதையடுத்து குமரி மாவட்டத்தில் நெல் சாகுபடி பரப்பு குறைந்து வருவதாகவும், விதைநெல் தட்டுபாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கேட்டனர். இதற்கு பதிலளித்த அதிகாரிகள், அரசின் கொள்முதல் மையங்களில் தேவையான விதை நெல் கையிருப்பு உள்ளதாகவும், 200 மெட்ரிக் டன் என்பதில் இருந்து, 210 மெட்ரிக் டன் அளவுக்கு வீரிய நெல்விதைகள் உள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் மாவட்டத்தில் பெய்த மழையளவு குறித்த புள்ளி விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. இதன்படி, கடந்த ஆண்டு 89 மி.மீ., அளவுக்கே மழை பெய்தது. ஆனால் நிகழாண்டு இதுவரையிலும் 141 மி.மீ., அளவுக்கு மழை பெய்துள்ளது தெரியவந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பெருமாள் ஏரி நிரம்பியதுஉபரி நீர் வெளியேற்றம்</u>**

கடலூர்:பெருமாள் ஏரி பெரும் பகுதி நிரம்பிய நிலையில், நீர் வரத்து அதிகரித்துள்ளதால், பாதுகாப்பு கருதி விநாடிக்கு 1,296 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றான பெருமாள் ஏரி, குள்ளஞ்சாவடி அடுத்த குண்டியமல்லூரில் உள்ளது. 574 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்ட இந்த ஏரியிலிருந்து 11 பாசன மதகுகள் மூலம் 6,503 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. குறிஞ்சிப்பாடி சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்யும் மழை நீரை ஆதாரமாகக் கொண்ட இந்த

ஏரி, சமீப காலங்களால், என்.எல்.சி., சுரங்கங்களில் இருந்து வெளி யேற்றப்படும் நீர் வாலாஜா ஏரி, பரவனாறு வழியாக பெருமாள் ஏரிக்கு வந்தடைகிறது. தற்போது, குறிஞ்சிப்பாடி பகுதியில் பெய்த கனமழை மற்றும் என்.எல்.சி., சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் அதிக நீரால், பெருமாள் ஏரியின் நீர் மட்டமான 6.5 அடிக்கு 6 அடியாக உயர்ந்துள்ளது. அதாவது 574 மில்லியன் கன அடிக்கு, 529 மில்லியன் கன அடி நீர் தேங்கியுள்ளது. ஏரிக்கு வினாடிக்கு 1,218 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.இதனால், ஏரியின் பாதுகாப்பு கருதியும், சுற்று வட்டாரத்தில் உள்ள விளை நிலங்கள் பாதுகாப்பு கருதியும் பூவாணிக்குப்பத்தில் உள்ள உபரி நீர் போக்கி மூலம் வினாடிக்கு 1,296 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இப்பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுப்பணித்துறை சார்பில் குண்டியமல்லூர் கிராமத்தில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பெருமாள் ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதை பார்வையிட்ட கலெக்டர் சுரேஷ்குமார், உபரி நீர் வெளியேற்றும் பகுதியில் உள்ள புதர்களை அகற்ற உத்தரவிட்டார். அதன்பேரில் பொக்லைன் இயந்திரம் மூலம் முட்புதர்கள் உடனடியாக அகற்றப்பட்டன.

## <u>சுருட்டப்பள்ளி அணைக்கட்டில் தண்ணீர் திறப்பு</u>

ஊத்துக்கோட்டை:விவசாய தேவைக்காக, சுருட்டப்பள்ளி அணைக்கட்டில் இருந்து, நேற்று மதியம், ஏரிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.15 ஏரிகளுக்கு...ஆந்திர மாநிலம், நகரியில் உருவாகும் ஆரணி ஆறு, பிச்சாட்டூர், சுருட்டப்பள்ளி ஆகிய பகுதிகளில் தேக்கி வைக்கப்படுகிறது. இதில் சுருட்டப்பள்ளி கிராமத்தில் உள்ள அணைக்கட்டு, 1954ம் ஆண்டு கட்டப்பட்டது.இங்கு தேக்கி வைக்கப்படும் தண்ணீர், விவசாயத் தேவைக்காக, தமிழக பகுதிகளில் உள்ள ஊத்துக்கோட்டை, பேரண்டூர், லட்சிவாக்கம், முக்கரம்பாக்கம்

வரை, 15 ஏரிகளுக்கு செல்லும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது.கடந்த ஒரு வாரமாக, வடகிழக்கு பருவமழையால் சுருட்டப்பள்ளி, நந்தனம், நாகலாபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில், மழை பெய்து வருகிறது. இதனால், நந்தனம் மலைப்பகுதிகளில் இருந்து வரும் தண்ணீர், ஆரணி ஆற்றில் சேர்ந்து, சுருட்டப்பள்ளி அணைக்கட்டில் நிரம்பி வருகிறது. இதனால், தமிழக ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு, தமிழக பொதுப்பணி துறை அதிகாரிகள், ஆந்திர அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.நேற்று மதியம் 2:00 மணிக்கு, சுருட்டப்பள்ளி அணைக்கட்டில் இருந்து, ஐந்து ஷட்டர்கள் இரண்டு அடி திறக்கப்பட்டு, வினாடிக்கு, 139 கனஅடி வீதம், ஊத்துக்கோட்டை ஏரிக்கு நீர்வரத்து கால்வாய் மூலம் செல்கிறது. அதிகாரிகளுக்கு தகவல்:ஏரி நிறைந்தவுடன், அங்கிருந்து மதகுகள் திறக்கப்பட்டு, பேரண்டூர் உள்ளிட்ட அனைத்து ஏரிகளுக்கு, தண்ணீர் அனுப்பப்படும். அணைக்கட்டு திறந்தவுடன், தண்ணீர் செல்லும் பகுதிகளுக்கு, பொதுப்பணி துறை அதிகாரிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அந்தந்த பகுதி பேரூராட்சி, ஊராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

## கோமுகி அணைநீர்மட்டம் உயர்வு

கச்சிராயபாளையம்:கோமுகி அணையின் நீர் மட்டம் அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பருவ மழை கடந்த ஆண்டு சரிவர பெய்யாததால் கச்சிராயபாளையம் பகுதியில் கோமுகி அணை மற்றும் ஏரிகளில் தண்ணீர் இல்லாமல் வற்றியது. விவசாயம் முற்றிலும் பாதித்தது. இந்த ஆண்டும் சம்பா சாகுபடி துவங்கிய நிலையில் மழையின்றி கோமுகி அணையின் நீர் மட்டம் மிகவும் குறைந்திருந்தது. கல்வராயன் மலை, கச்சிராயபாளையம் பகுதியில் சில தினங்களாக குறைந்த அளவு மழையே பெய்த நிலையில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் கன மழை பெய்தது. கோமுகி அணை பகுதியில் 55 மில்லி

மீட்டர் மழை பதிவானது. கல்வராயன் மலையிலிருந்து உருவாகும் பொட்டியம், கல்படை, மல்லிகைபாடி ஆறுகளின் வழியாக அணைக்கு வினாடிக்கு 300-350 மில்லியன் கன அடி நீர் வரத்துங்கி நீர் மட்டம் 40 அடியை எட்டியுள்ளது. விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மரக்காணம் பகுதியில்அதிகபட்ச மழை**

விழுப்புரம்;மரக்காணம் பகுதியில் அதிகபட்சமாக 56 மி.மீ., மழை பெய்தது.விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்துள்ள மழை அளவு விவரம்: செஞ்சியில் 22 மி.மீ., திருக்கோவிலூர் 4.00 மி.மீ., திண்டிவனம் 24 மி.மீ., விழுப்புரம் 28 மி.மீ., உளுந்தூர்பேட்டை 2 மி.மீ., வானூர் 32 மி.மீ., சங்கராபுரம் 52 மி.மீ., கள்ளக்குறிச்சி 46 மி.மீ., மரக்காணம் 56 மி.மீ., அளவு மழை பெய்துள்ளது.மாவட்டம் முழுவதும் மொத்தம் 206 மி.மீ., அளவும், சராசரியாக 29. 56 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

**வளத்தியில் குளம் நிரம்பியது**

அவலூர்பேட்டை:வளத்தியில் மார்க்கெட் கமிட்டி அருகே உள்ள குளம் நிரம்பியது.பரவலாக மழை பொழிந்ததை தொடர்ந்து மேல்மலையனூர் ஒன்றிய பகுதிகளிலும் மழை பெ#தது. தொடர் மழை பெ#ததால் மண்ணில் ஈரப்பதம் இருந்தது. சிறு பள்ளங்கள், பண்ணை குட்டைகள் நிரம்பின. பாசன கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்தது. ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கியுள்ளது.வளத்தியில் மார்க்கெட் கமிட்டி அருகே உள்ள குளம் நிரம்பியுள்ளது.அவலூர்பேட்டை சின்ன குளத்து தண்ணீரில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. இருப்பினும் இந்த மழையால் ஏரிகள் நிரம்பவில்லை.இந்த மழையால் நடப்பாண்டில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## மழையால் மானாவாரி பயிர்கள் செழிப்பு

தியாகதுருகம்;தியாகதுருகம் பகுதியில் பெய்த அளவான மழையால் மானாவாரியில் சாகுபடி செய்த பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

தியாகதுருகம் பகுதியில் உள்ள 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் 8,000 ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 3,000 ஏக்கரில் உளுந்து, 1,000 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். கடந்த ஆக., மாதம் பருத்தி, மக்காச்சோளம் விதைப்பு பணிகள் முடித்து பராமரித் தனர். மானாவாரி கம்பு அறுவடை முடிந்து கடந்த 15 நாட்களுக்கு முன் உளுந்து விதைத்து முடித்தனர்.கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் அளவாக பெய்த பருவ மழையால் பருத்தி, மக்காச்சோளம், உளுந்து செடிகள் செழித்து வளர்ந்துள்ளது. ஊட்டச்சத்து உரங்களை தூவி பராமரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு மழை குறைந்து நன்செய் பயிர்கள் ஏமாற்றிய நிலையில் இம்மூன்று பயிர்களும் விவசாயிகளுக்கு லாபத்தை கொடுத்தன. சமீபத்தில் அறுவடை செய்த மானாவாரி கம்பும் கூடுதல் மகசூலை கொடுத்தது.அளவான மழை தொடர்ந்தால் நல்ல லாபத்தை பயிர்கள் ஈட்டித் தரும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## ஊட்டியில் நிரம்பி வழியும் அணைகள்

ஊட்டி :ஊட்டியில் பரவலாக பெய்த மழையால், ஊட்டி பார்சன்ஸ் வேலி உட்பட அணைகள் நிரம்பி வழிகின்றன.ஊட்டியில், கடந்த 3 மாதங் களாக பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, கடந்த 10 நாட்களாக ஊட்டியில், விட்டு, விட்டு பெய்து வரும் மழையால், நகரில் உள்ள நீராதார அணைகள் அனைத்தும் வேகமாக நிரம்பி வருகின்றன. இதில், நகரின் முக்கிய நீராதாரமான பார்சன்ஸ் வேலி, டைகர்ஹில் போன்ற அணைகள், கொள்ளளவை எட்டி, நிரம்பி வழியத் துவங்கியுள்ளன. பார்சன்ஸ் வேலியில் இருந்து மின்சார துறையில்,

தினமும் கணிசமான அளவு மின் உற்பத்திக்கு, நீரை எடுத்து வருகின்றனர்.நிரம்பாத மார்லிமந்து இதில், ஊட்டி நகராட்சிக்குட்பட்ட 5க்கும் மேற்பட்ட வார்டு மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்து வரும் மார்லிமந்து அணை மட்டும் நிரம்பாமல் உள்ளது. மொத்தம் 23 அடி கொள்ளளவு கொண்ட அந்த அணையில் தற்போது வெறும் 9 அடி அளவுக்கு மட்டுமே நீர் நிரம்பியுள்ளது.ஊட்டி நகராட்சி கமிஷனர் சிவகுமார் கூறுகையில்,""நகரில் உள்ள அணைகள் நிரம்பியுள்ளன; இதனால், நகரில் தண்ணீர் தட்டுப்பாடு நிச்சயம் இருக்காது. மார்லிமந்து அணையை பொறுத்தவரை, அணையில் இருந்த கசிவுகள் சரி செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், அணை நீர் நிரம்புவதில்லை. அந்த அணை உட்பட பிற அணைகளை ஒட்டியுள்ள குடியிருப்புகள் மற்றும் கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஆய்வு செய்து, வழிந்தோடி வரும் மழைநீரை கால்வாய் வழியாக கொண்டு வந்து, அணைகளில் சேர்ப்பதற்குரிய ஆய்வுகள், தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது,'' என்றார்.

**திருச்சி மாவட்டத்தில் மழை: "செம' மகிழ்ச்சியில் விவசாயிகள்**

திருச்சி :திருச்சி மாவட்டத்தில் தொடர்ந்து, பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதிகப்பட்சமாக பொன்னையாறு பகுதியில், 47.80 மி.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறிப்பிட்ட நாளில் பெய்ய துவங்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்திருந்தது. ஆனால், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெப்ப சலனம் காரணமாக, மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் முன் கூட்டியே, பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சி மாவட்டத்தில் கடந்த, 17 ம் தேதி முதல் மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த, 20 ம் தேதி மற்றும் 21ம் தேதிகளில் திருச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய நேற்று காலை வரை, திருச்சி

மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்தது.நேற்று மதியம், 12 மணி யளவில் மழை சற்று குறைந்து, லேசாக வெயில் அடித்தது. தொடர்ந்து, ஒரு வார காலமாக மழை பெய்து வருவதால், திருச்சி மாநகரில் வழக்கத்துக்கு மாறாக, அதிகளவில் குளிர்ந்த காற்று வீசி வருகிறது. திருச்சி மாநகர பகுதிகளில் பல்வேறு பகுதிகளில் மழை நீர் வடியாததால், பொதுமக்கள், வாகன ஓட்டிகள் பெரும் அவதிப்பட்டனர்.திருச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை, 8 மணி முதல் நேற்று காலை, 8 மணி வரை, பெய்த மழை அளவு (மி.மீ) விபரம் வருமாறு மணப்பாறை, 17.80, புள்ளம்பாடி, 2.40, தாத்தையாங்கர் பேட்டை, 4.30, திருச்சி டவுன் 4.30, நவலூர் குட்டப்பட்டு 23.30, கல்லக்குடி, 2.10, வாத் தலை அணைகட்டு, 1.90, கொப்பம்பட்டி, 2, தென்பரநாடு, 5, பொன் மலை, 7.40 திருச்சி ஜங்ஷன், 4.80 ஆகிய அளவுகளில் மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் காலை முதல், நேற்று காலை வரை, 24 மணி நேரத்தில், திருச்சி மாவட்டம் முழுவதும் சராசரியாக, 141 மி.மீ., மழை பதிவாகியிருந்தது.தொடர்ந்து, கடந்த எட்டு நாட்களாக, திருச்சி மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. இதனால், கிணறு மற்றும் ஆழ்குழாய்கள் மூலம் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள், சோமரசம் பேட்டை, ஜீயபுரம், பெருகமணி, குடமுருட்டி உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி பணிகளை துவக்கியுள்ளனர். மேலும், மானாவரி நிலங்களில் நிலக்கடலை, ஆமணக்கு உள்ளிட்ட எண்ணை வித்து பயிர்களை, சாகுபடி செய்ய முடியும் என விவசாயிகள் தெம்பில் உள்ளனர்.

**பஞ்சப்பட்டியில் 72 மி.மீ., மழை பதிவு**

கரூர் :கரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம், பஞ்சப்பட்டியில் அதிகபட்சமாக, 72 மி.மீ., மழை பெய்தது.கரூர் மாவட்டத்தில், கடந்த பத்து நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. லாலாப்பேட்டை,

கிருஷ்ணராயபுரம் பகுதியில், பல வீடுகளில் தண்ணீர் புகுந்ததால் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.தொடர்ந்து பெய்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கரூரில் நேற்று காலை மழை நின்று, இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்பியது. நேற்று முன்திம் பெய்த மழை அளவு (மி.மீ.,):அரவக்குறிச்சி, 7.60 மி.மீ., க.பரமத்தி, 6.40, குளித்தலை, இரண்டு மி.மீ., மாயனூர், 18, கரூர் டவுன், 13, அணைபாளையம்,13 , பாலவிடுதி, 38.30, கடவூர், 33.60, கிருஷ்ணராயபுரம், 24, மையம்பட்டி, 18.30, மாவட்டத்தில் அதிகபட்சமாக பஞ்சபட்டியில்,72 மி.மீ., மழை பதிவானது. ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில், 245. 80 மி.மீ., மழை பெய்துள்ளது.

## ரூ.2.64 கோடி வேளாண் உபகரணங்கள்விவசாயிகளுக்கு வழங்கல்: கலெக்டர்

கரூர் :கரூர் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம், 2.64 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் உபகரணங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என, கலெக்டர் ஜெயந்தி, தெரிவித்தார்.கரூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம், கடந்த ஆண்டுக்கு, 2.64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. செயற்கை முறை செறிவூட்டுதல் திட்டத்தின் கீழ், மழைநீர் சேகரிப்பு பணிகள், நிலத்தடிநீர் குறைவாக உள்ள இடங்களில் பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள், கிராம குட்டை அமைத்தல் மற்றும் கழிவுநீர் குட்டை அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.செயற்கை முறை செறிவூட்டல் திட்டத்தின் கீழ், 34.10 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆறு கசிவுநீர் குட்டைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு மற்றும் ஓடுநீர் மேலாண்மை திட்டத்தில், 14 பண்ணைக் குட்டைகளும், ஒரு கிராமிய குளமும், ஒரு கசிவுநீர் குட்டை சேர்த்து, 16 பணிகளுக்கு, 14.40 லட்சம் மதிப்பில், 14 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர். தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நவீன

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. புதிதாக வடிவமைத்து அறிமுகப்படுத்திய வேளாண் இயந்திரங்களுக்கு, 50 சதவீதமும், தற்போது புழக்கத்தில் உள்ள இயந்திரங்களுக்கு, 25 சதவீதம், இலகுவாக இயங்க கூடிய கருவிகளுக்கு, 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.திட்டத்தின் கீழ் கரூர், குளித்தலை வேளாண் பொறியியல் அலுவலகம் மூலமாக, 131 பயனாளிகளுக்கு, ஒரு கோடியே, 86 லட்சத்து, 30 ஆயிரம் மதிப்பில், 346 கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.வேளாண் இயந்திரங்கள் வழங்கம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர் போன்ற கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இயந்திரங்கள், 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக, 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.நவீன வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்து, ஒரு லட்சத்து, 22 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு, 80 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.நவீன வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் குறித்த செயல் விளக்கங்கள், 27 இடங்களில், 81 ஆயிரம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு, 644 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் இரண்டு கோடியே, 64 லட்சம் மதிப்பிலான திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## <u>அமராவதி பாசனத்தில் நெல் நடவு பணி தீவிரம் : நாற்று முளைப்பு திறன் குறைவால் பாதிப்பு</u>

கரூர் :கரூர் மாவட்டத்தில் தொடர் மழை, அமராவதி பாசனத்தில் தண்ணீர் திறப்பால், நெல் நடவு பணி தீவிரமாக நடக்கிறது. நாற்று முளைப்பு திறன் குறைவால், ஏக்கருக்கு, 50 கிலோ விதை நெல் பயன்படுவதால், விவசாயிகளுக்கு கூடுதல் செலவினமாகிறது.அமராவதி அணையின் மூலம், திருப்பூர் மாவட்டப்பகுதிகள், மற்றும் கரூர்

மாவட்டத்தில் சின்னதாராபுரம், நஞ்சை காளிகுறிச்சி, பள்ளபாளையம், மாயனூர் ஆகிய பகுதிகளில், பழைய ஆயக்கட்டு பாசனம் மூலம், 29 ஆயிரத்து, 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடந்த ஆகஸ்ட் மாதம், அமராவதி அணையின் நீர்மட்டம் உயர்ந்ததால், திருப்பூர் மாவட்டத்தில் பிரதான கால்வாய்க்கு, தண்ணீர் திறக்கப்பட்டது. கரூர் மாவட்ட பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் திறக்கப்படாததால், சின்னதாராபுரத்தில் விவசாயிகள் மறியல் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, ஆறு நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. விவசாயிகள், நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்தனர். இதையடுத்து தண்ணீர் இல்லாததால், நெற்பயிர்கள் கருகியதால், அமராவதி தண்ணீர், கரூர் மாவட்டத்துக்கு புறக்கணிப்படுவதாக கூறி, பள்ளபாளையம் ராஜ வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த, 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள், காய்ந்த நெற்பயிருடன் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.கலெக்டர் ஜெயந்தி, பேச்சு வார்த்தை நடத்தி, தண்ணீர் திறக்க நடவடிக்கை மேற்கொண்டார். இதற்கிடையில் வடகிழக்கு பருவமழை, முன் கூட்டியே துவங்கியதால், கரூர் மாவட்டத்தில் கடந்த, 10 நாட்களாக தொடர்ந்து மழை பெய்த வண்ணம் உள்ளது. மழையின் காரணமாக, மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.நிலத்தடி நீர்மட்டம் உயர துவங்கி உள்ளது. அமராவதி பாசனத்தில் கடைமடை வரை தண்ணீர் கிடைக்க துவங்கி உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கரூர் அடுத்த சுக்காலியூர், செட்டிபாளையம் உள்ளிட்ட பகுதியில் விவசாயிகள் நெல் நடவு பணியில் தீவிரமாக இறங்கி உள்ளனர்.விவசாயி சுப்பிரமணி கூறியதாவது:கடந்த சில நாட்களாக பெய்யும் பலத்த மழையால், பாசனத்தில் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. வயல் சமன் செய்து, நெல் நடவு பணி நடக்கிறது. ஒரு ஏக்கருக்கு, 30 கிலோ விதை நெல் போதுமானது. வெயிலில் தாக்கம் அதிகரிப்பால், முளைப்பு திறன்

பாதிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ விதை நெல் பயன்படுத்தியும், பற்றாகுறையாக உள்ளது. நெல் நடவின் போது, ஒரு மூட்டை டி.ஏ.பி., உரம் பயன்படுத்த வேண்டும். ஒரு மாதம் கழித்து யூரியா, பொட்டாஷ் மற்றும் வேப்பம் புண்ணாக்கு ஆகிய தலா ஒரு மூட்டை பயன்படுத்த வேண்டும். கடந்த ஆண்டு நடவு கூலி ஏக்கருக்கு, 2,800 ரூபாயாக இருந்தன. நடப்பாண்டு, 200 ரூபாய் உயர்ந்துள்ளது. ஒரு ஏக்கர் பயிர் நடவு செய்ய வேண்டும் என்றால், 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது, என்று அவர் கூறினார்.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

தாடிக்கொம்பு: தாடிக்கொம்பு சுற்று வட்டார பகுதிகளில் பெரும் பாலோனோர் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். மழையை பயன்படுத்தி உண்டார்பட்டி, காப்பிளியபட்டி, விராலிப்பட்டி உள்ளிட்ட சுற்றுப்புர கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் மானாவாரி கடலை சாகுபடி செய்தனர். பருவ மழை பெய்து வருவதால் கடலை பயிர் செழிப்புடன் வளர்ந்து வருகிறது. இதனால் அதிக மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

**மாவட்டத்தில் சராசரி மழையை விட அதிகம்**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் அக்., வரை சராசரியாக 607.2 மி.மீ., மழை பெய்ய வேண்டும். இந்த ஆண்டு 643.24 மி.மீ., வரை மழை பெய்துள்ளது. இது சராசரியை விட 36.04 மி.மீ., கூடுதலாகும். மாவட்டத்தில் 2,065 கண்மாய்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கண்மாய்கள் 30 சதவீதத்திற்கு மேல் நிரம்பியுள்ளன. மாவட்டத்தில் 91,488 பாசன கிணறுகள் உள்ளன. இவற்றில் 5 சதவீத கிணறுகளில் ஒரு மணி நேரமும், மீதமுள்ள கிணறுகளில் ஒரு மணி நேரத்திற்கு குறைவாக வும் தண்ணீர் நிரம்பியுள்ளது. நேற்றுமுன்தினம் நிலவரம்: மழையளவு (மி.மீ.,) திண்டுக்கல்-20.20, கொடைக்கானல் -11, நத்தம்-7, நிலக்கோட்டை-7, பழநி-23, வேடசந்தூர்-23.20, சத்திரபட்டி-18,

வேடசந்தூர் புகையிலை மையம்-23.20, கொடைக்கானல் போட்கிளப்-6.75, காமாட்சிபுரம்-22.30, மொத்தம்-161.65

**விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்த கலெக்டர் அறிவுரை**

வத்தலக்குண்டு :பருவ மழை மூலம் கிடைக்கும் நீரை விவசாயிகளும், பொதுமக்களும் திட்டமிட்டு சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என கலெக்டர் வெங்கடாசலம் அறிவுறுத்தி உள்ளார். வத்தலக்குண்டு அய்யம்பாளையம் மருதாநதி அணையிலிருந்து விவசாயத்திற்கு நீரைத் திறந்து விட்டு கலெக்டர் கூறியதாவது, "கடந்த எட்டு ஆண்டுகளுக்குப் பின் மருதாநதி அணை நிரம்பி உள்ளது. பருவ மழை துவங்கி உள்ளதால் கிடைக்கும் நீரை திட்டமிட்டு சேமித்து சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். முக்கியமாக விவசாயிகள் நீர் ஆதாரத்திற்கு ஏற்ப சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்த முன்வர வேண்டும். சொட்டு நீர்பாசனத்திற்கு மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு நீர் தேவைப்படக் கூடிய பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்யலாம். கடந்த இரண்டு ஆண்டுகளாக குடிநீருக்காக நாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பதை அறிய வேண்டும். தண்ணீரை தேவையில்லாமல் வீணாக்க கூடாது. பழநியில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்காக விமானப்படை வீரர்கள் உதவி செய்தனர். அவர்களுக்கு நிர்வாகம் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டத்தில் வீடு இடிந்த 193 பேருக்கு 2,500 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது" என்றார். ஆத்தூர் ஒன்றிய செயலாளர் நடராஜன், ஒன்றியக்குழு தலைவர்கள் யாகப்பன், மோகன், பேரூராட்சி துணை தலைவர் சதீஸ்குமார், விவசாயிகள் சங்க தலைவர்கள் மரியலூயிஸ், சங்குப்பிள்ளை, சித்திரன், சவுந்தர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## நிரம்பிய நீர்த்தேக்கம்

கொடைக்கானல்: கொடைக்கானல் ஏரி கடந்த 20 நாட்களாக நிரம்பி வழிகிறது. அதைப்போன்றே நகருக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக திகழும் மனோரத்தினம் சோலை அணை(மொத்த நீர்மட்டம் உயரம் 36 அடி) மற்றும் நகராட்சி குடிநீர்த்தேக்கம்(மொத்த நீர்மட்ட உயரம் 18 அடி) ஆகியவையும் நிரம்பி வழிகின்றன.

## பெரியகுளம் பகுதியில் 10 கண்மாய்கள் நிரம்பின

பெரியகுளம்: பெரியகுளம் பகுதியில் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ள கண்மாய்களைத் தவிர 10 கண்மாய்கள் நிரம்பியுள்ளன. பிற கண்மாய்களும் நிரம்பி வருகிறது. பெரியகுளம் தாலுகா பகுதிக்கு உட்பட்டு 38 கண்மாய்கள் உள்ளன. நான்காண்டுகளுக்கு பிறகு வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால் கண்மாய்களில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகாரிகுளம், இ.புதுகுளம், கைக்கிளான்குளம், சிறுகுளம், நாராயணன்குளம், நத்தியாபுரம் உட்பட 10 கண்மாய்கள் நிரப்பிவிட் டன. ஆக்கிரமிப்பில் முழுவதுமாக சிக்கியுள்ள மனக்காட்டு கண்மாய், வீரப்பநாயக்கர் கண்மாய், செட்டிகுளம் கண்மாய், போடான்குளம் கண்மாய் உட்பட ஆக்கிரமிப்பில் முழுவதும் சிக்கியுள்ள கண்மாய்களுக்கு நீர் வரத்து இருந்தும் ஆக்கிரமிப்பாளர்கள் நீரின் ஓடுபாதையை மாற்றியுள்ளனர். பிற கண்மாய்கள் நிறைந்து வருகிறது. பொதுப்பணித்துறை நிர்வாகம் கண்மாய் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விவசாயிகள்சங்க கூட்டம்

திருவாடானை: திருவாடானையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முருகேசன், மாவட்ட செயலாளர் முத்துராமு உட்பட பலர் கலந்து கொண்டனர். கடந்தாண்டு பாதிக்கபட்ட விவசாய

நிலங்களுக்கு உடனே பயிர் இன்சூரன்ஸ் வழங்கவேண்டும். பருவமழை பெய்து வருவதால் விவசாயிகளுக்கு தேவையான உரங்களை தட்டுபாடு இல்லாமல் வழங்கவேண்டும். கூட்டுறவு சங்கங்களில் தாமதமில்லாமல் பயிர் கடன் வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

**சிவகங்கையில் 50 சத கண்மாய்கள் நிரம்பின**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் தொடரும் மழையால் 50 சதவீத கண்மாய்கள் நிரம்பியுள்ளதாக வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) கணேசன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:சிவகங்கை மாவட்டத்தில் ஆண்டுக்கு 85 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாயம் நடைபெறுகிறது. இவ் வாண்டு பெய்த மழையால் இதுவரை 50 ஆயிரம் எக்டேர் வரை நெல் விதைப்பு பணி முடிந்துள்ளது. எஞ்சியவை அடுத்தடுத்து நிறைவு பெறும். மாவட்ட அளவில் ஆண்டுக்கு 904 மி.மீ., மழை பொழிவு இருக்கும். இதுவரை 711 மி.மீ., மழை பெய்துள்ளது. திருப்புவனம் பகுதி தவிர, பிற பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. இம்மாதம் மட்டுமே 210 மி.மீ., மழை பெய்துள்ளது. இதுவரை 50 சதவீத கண்மாய்கள் நிரம்பியுள்ளன. தொடர்ந்து வரும் நீர் வரத்துள்ளதால் எஞ்சிய கண்மாய்களும் நிரம்ப வாய்ப்புள்ளது.138 டன் விதை நெல்,இடுபொருட்கள், உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது, என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**உலக வர்த்தக அமைப்பில் உணவு பாதுகாப்புக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும்**



ஐ.நா.சபை : உணவு பாதுகாப்பு விஷயத்தில் நிரந்தர தீர்வு காண வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் நுண்பொருளாதார கொள்கை பிரச்னை சர்வதேச வர்த்தகம் மற்றும் மேம்பாடு தொடர்பாக நடந்த அமர்வில், இந்தியா சார்பில் பங்கேற்ற பிரதிநிதி அமீத் நரங் கூறியதாவது: ஏழைகளுக்கு வழங்குவதற்காக உணவு சேமித்து வைக்க வளரும் நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். மேலும், உணவு பாதுகாப்புக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும். அதற்கேற்ப உலக வர்த்தக அமைப்பு விதிகளில் திருத்தம் செய்வது அவசியம். வளரும் நாடுகளில் உணவு பாதுகாப்பு என்பது ஏழ்மையை போக்குவதும் நிலையான மேம்பாடு அடையச்செய்வதும் ஆகும். இதில் பிற பிரச்னைகளை போலவே முக்கியத்துவம் அளித்து அணுக வேண்டும்.இவ்வாறு அமீத் நரங் கூறினார்.வளரும் நாடுகளில் உள்ள ஏழைகளுக்கான உணவு பாதுகாப்பு திட்டம் குறித்து தெளிவான முடிவு எடுக்கப்படாத வரையில் வர்த்தக இணைப்பு ஒப்பந்தத்தை ஏற்க

முடியாது என இந்தியா ஏற்கெனவே நிலைப்பாடு எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உலக வர்த்தக அமைப்பின் சட்டதிட்டங்களில் உணவு பாதுகாப்பு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஐ.நா. பொதுச்சபையில் இந்தியா கண்டிப்பு**



நியூயார்க், உலக வர்த்தக அமைப்பின் சட்ட திட்டங்களில் உணவு பாதுகாப்பு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என ஐ.நா. பொதுச்சபையில் இந்தியா கண்டிப்புடன் கூறியது.

ஒப்பந்த முயற்சி தோல்வி

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில் 3 மாதங்களுக்கு முன் ‘டபிள்யூ.டி.ஓ.’ என்னும் உலக வர்த்தக அமைப்பின் மாநாடு நடைபெற்றது. இதில் உலக நாடுகள் இடையே வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் நிறைவேற்றும் முயற்சியில் தோல்வி ஏற்பட்டது. ஏழை எளியோருக்கு உணவுப்பொருட்களை மானிய விலையில் வழங்கவும், உணவு தானியங்களை தேவையான அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளவும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு கூடுதல் சுதந்திரம் அளிக்க வேண்டும், அதற்கான வழிவகை காணப்பட வேண்டும் என இந்தியா உறுதியாக நின்றதே, இந்த ஒப்பந்தம் நிறைவேற்ற முடியாமல் போனதற்கு காரணம் ஆகும்.

இந்தியாவின் நிலை

இந்த நிலையில், நியூயார்க்கில் ஐ.நா. பொதுச்சபையில், ‘பொருளாதார கொள்கை கேள்விகள்: சர்வதேச வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி’ என்ற

தலைப்பில் சிறப்பு அமர்வு ஒன்று நடந்தது. இதில் இந்தியாவுக்கான ஆலோசகர் அமித் நாராங் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் இந்தியாவின் நிலையை தெளிவுபடுத்தி கூறியதாவது:– வளர்ந்து வரும் நாடுகளில் வறுமை ஒழிப்பு, நீடித்து நிலைத்து நிற்கும் வளர்ச்சி, உணவு பாதுகாப்புக்கு முக்கிய பங்கு உண்டு. மற்ற பிரச்சினைகளில் காட்டுகிற அவசரத்தை இதிலும் காட்ட வேண்டும்.


நிரந்தரதீர்வு

உலக வர்த்தக அமைப்பின் சட்ட திட்டங்களில் தேவையான மாற்றங்களுடன், உணவு பாதுகாப்புக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். இது கண்டிப்பாக செய்ய வேண்டியதாகும். பாலியில் 2013–ம் ஆண்டு டிசம்பரில் நடந்த உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகளின் மந்திரிகள் மட்டத்திலான மாநாட்டில் இந்தியா செயல் உத்வேகத்துடன் கலந்து கொண்டது. வர்த்தக வசதி உள்ளிட்ட அந்த மாநாட்டு முடிவுகளில் இந்தியா உறுதியாக உள்ளது.

சுதந்திரம்வேண்டும்

இந்தியா அதில் கையெழுத்திட்டுள்ள நாடு. அதில் இருந்து பின்வாங்காது. வர்த்தக வசதி தொடர்பான முடிவில் கவனம் செலுத்துகிற வேளையில், பிற முடிவுகள் மீது கவனம் செலுத்தப்படவில்லை. குறிப்பாக உணவு பாதுகாப்பு தொடர்பானதை கூறலாம். வளர்ந்து வரும் நாடுகள், குறிப்பாக இந்தியா, எந்தவிதமான தடை அச்சுறுத்தல்களும் இல்லாமல் உணவு தானிய இருப்பினை ஏழை எளியோருக்கு வழங்குவதற்கு தேவையான சுதந்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>தமிழ்நாட்டில் மேலும் 2 நாள் மழை நீடிக்கும்</u>



அரபிக்கடலில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரம் அடைந்து, தாழ்வு மண்டலமாக மாறும் நிலை உள்ளது. இதன் காரணத்தாலும், இலங்கை அருகே உருவான மேலடுக்கு சுழற்சி காரணமாகவும் தமிழ்நாட்டில் மேலும் 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

மழை நீடிக்கும்

தென்மேற்கு பருவமழை கடந்த 18-ந் தேதி முடிவடைந்தது. அன்றைய தினமே தமிழ்நாட்டுக்கு அதிக மழை பொழிவை தரும் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. அன்று முதல் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதுவரை இந்த பருவத்தில் 19 செ.மீ. மழை பெய்து உள்ளது. தமிழ்நாட்டில் தொடர்ந்து மழை நீடிக்கும் என்று வானிலை மையம் அறிவித்து உள்ளது. இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:-

காற்றழுத்த தாழ்வுப்பகுதி

மன்னார் வளைகுடாவில் இலங்கை அருகே காற்று மண்டலத்தில் உருவான மேலடுக்கு சுழற்சி அதே இடத்தில் உள்ளது. இதேபோல் அரபிக்கடலில் தென்மேற்கு மற்றும் அதைத் தொடர்ந்து உள்ள மத்திய பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நீடிக்கிறது. அது வலுப்பெற்று வருகிறது. அது அடுத்த 24 மணி நேரத்திற்குள் தீவிரம் அடைந்து தாழ்வு மண்டலமாக மாறும் வாய்ப்பு உள்ளது. பின்னர் அது எந்த திசையை நோக்கி நகர்கிறது என்பதை பொறுத்து தான் மழையை கணிக்க இயலும். இருப்பினும் இலங்கை அருகே உள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாகவும், அரபிக்கடலில் காணப்படும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாகவும் தமிழ்நாட்டில் சனிக்கிழமையும் (இன்று) மழை நீடிக்கும். அனேக இடங்களில் மழை பெய்யும். சில இடங்களில் கனமழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையில் பரவலாக மழை பெய்யும். இவ்வாறு இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன்

தெரிவித்தார்.

**சென்னையில் அதிக மழை**

அரபிக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தாழ்வு மண்டலமாக மாறி வடகிழக்கு திசையில் நகர்ந்து புயல் சின்னமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளாவில் பரவலாக மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. அக்டோபர் மாதத்தில் சென்னையில் பெய்யும் சராசரி மழை அளவு 28.64 சென்டி மீட்டர். ஆனால் இந்த ஆண்டில் இதுவரை 32.96 செ.மீ. மழை பெய்து இருக்கிறது.

மழைஅளவு

தமிழ்நாட்டில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:-

சென்னை மீனம்பாக்கம், அவினாசி தலா 9 செ.மீ., சென்னை நுங்கம்பாக்கம், பெருந்துறை, கொளப்பாக்கம் தலா 8 செ.மீ., பூந்தமல்லி, புழல், சோழவரம், பொன்னேரி தலா 7 செ.மீ., தாம்பரம், எண்ணூர், மாதவரம், மரக்காணம் தலா 6 செ.மீ. மழை பெய்துள்ளது.

**புழல், சோழவரம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



தொடர் மழை காரணமாக புழல், சோழவரம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சென்னை புறநகர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடி ஆகும். தற்போது 880 மில்லியன்

கன அடி இருப்பு உள்ளது. பொத்தூர், ஏராங்குப்பம், லட்சுமிபுரம், எல்லம்மன்பேட்டை, கோணிமேடு, பம்மதுகுளம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்து வருவதால் புழல் ஏரிக்கு 125 மில்லியன் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று புழல் ஏரி பகுதியில் 54.8 மி.மீ மழை பெய்தது. ஏரியில் இருந்து சென்னை மாநகர குடிநீருக்காக 126 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதே போல் தொடர்ந்து பெய்து வரும் மழையால் சோழவரம் ஏரியிலும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.. சாலைகளில் தேங்கி கிடக்கும் தண்ணீரை மின்மோட்டார் மூலம் உறிஞ்சி லாரிகளில் ஏற்றி அப்புறப்படுத்தி வருகின்றனர்.

<u>மூலைக்கரைப்பட்டி பகுதியில் 10 குளங்கள் நிரம்பின மானூர் குளம் நிரம்புமா?– விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>



மானூர், தொடர்ந்து பெய்த மழை காரணமாக மூலைக்கரைப்பட்டி பகுதியில் 10 குளங்கள் நிரம்பின. மானூர் குளம் நிரம்புமா? என விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

<u>தொடர் மழை</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லை மாவட்டத்திலும் பலத்த மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் உள்ள பல குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. பாபநாசம், சேர்வலாறு உள்ளிட்ட அணைகளிலும் நீர்மட்டம் 'கிடுகிடு'வென உயர்ந்து உள்ளது. மூலைக்கரைப்பட்டி பகுதியில் உள்ள பருத்திப்பாடு குளம், பெட்டை குளம், சுருளை குளம், சிறியந்தூர்குளம், சிவந்திப்பட்டி குளம், உள்பட 10 குளங்கள் நிரம்பின. ஆலங்குளம்

அருகே உள்ள ஊத்துமலை பெரியகுளம் நிரம்பி உடைந்தது. இதில் இருந்து வெளியேறிய தண்ணீர் அருகில் உள்ள 200 க்கும் மேற்பட்ட வீடுகளை சூழ்ந்தது.

<u>மானூர் குளம்</u>

ஆனால் நெல்லை மாவட்டத்தில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான மானூர் குளத்துக்கு தண்ணீர் வரவில்லை. இந்த குளம் 1120 ஏக்கர் பரப்பளவு கொண்டது. குளம் நிரம்பினால் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் நேரடி பாசன வசதி பெறும். மறைமுகமாக 1500 ஏக்கர் நிலத்துக்கு பாசன வசதி கிடைக்கும். மானூர், மாவடி, மதவக்குறிச்சி, எட்டான்குளம் ஆகிய பஞ்சாயத்துகளைச் சேர்ந்த 30 கிராமங்கள் தண்ணீர் வசதி பெற்று அங்கு விவசாயம் செழிக்கும். ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார் அணை, குண்டாறு ஆகிய அணைகளை விட மானூர் குளத்தின் கொள்ளளவு அதிகம். 190 மில்லியன் கனஅடி தண்ணீரை தேக்கி வைக்க முடியும். 33 கிலோ மீட்டர் தூரம் வழியாக 19 குளங்கள் நிரம்பிய பிறகே இந்த குளத்துக்கு தண்ணீர் வரும்.

<u>நிரம்புமா?</u>

கடந்த 2006–ம் ஆண்டு பெய்த பலத்த மழையின் போது மானூர் குளம் பெருகி மறுகால் விழுந்தது. அதன்பின்னர் சில ஆண்டுகள் குளத்துக்கு சிறிதளவு தண்ணீர் தான் வந்தது. இதன்மூலம் கிணற்று பாசனம் மட்டுமே நடந்தது. பிறகு குளத்துக்கு தண்ணீர் வந்து பெருகவே இல்லை. இந்த ஆண்டு கடந்த 7 நாட்களாக தொடர்ந்து மழை பெய்தது. ஆனால் மானூர் குளத்துக்கு ஒரு நாள் மட்டும் தண்ணீர் வந்தது. அதன் பின்னர் தண்ணீர் வரவில்லை. குளம் நிரம்பினால் விவசாயம் செய்து பயன் அடையலாம் என எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, நெல்லை மாவட்டத்தில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான மானூர் குளத்துக்கு தண்ணீர் வரும் என்று

எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் ஒரு வார காலமாக மழை தொடர்ந்து பெய்த போதிலும் குளத்துக்கு தண்ணீர் வரவில்லை.